**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT, KRISHNAGIRI**

**Mcop.No. 949 /2018 (Joint Trial with 933/2018)**

Deposition of PW3 Chief

Solemnly affirmed sworn by **Tmt.P.Sangeetha** Grade-I B.C., on date 03.02.2026 in accordance with provisions with the Act of 1969.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.செல்வராஜ் | Father's Name | : | திரு.திம்மராயன் |
| Village | : | | Taluk | : | |
| calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் எனது முதல் விசாரணை குறித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை என உறுதி கூறுகிறேன்.

**3 வது எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் ம .த.சா..2 வெங்கடேஷ் அழைத்தன்பேரில் சாட்சி சொல் வந்துள்ளேன் என்றால் சரிதான். வெங்கடேஷ் என் பக்கத்து ஊர்காரர் அந்த வகையில் தெரியும். விபத்து நடைபெற்ற தேதி மற்றும் நேரம் சொல் முடியுமா என்று சொன்னால் நான் குப்பத்தில் இருந்து ஆட்டோவின் பின்புறம் என் இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டு இருந்தேன் . என்னுடைய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் தற்போது ஞாபகத்தில் இல்லை . அந்த இருசக்கர வாகனம் என் சொந்த வண்டி கிடையாது. அன்றைய தினம் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டி சொல்லவில்லை என்றால் சரியல்ல . நான் அன்றைய தினம் இருசக்கர வாகனத்தை ஓட்டி செல்லவில்லை என்றும் எனக்கு முன்பாக 30 அடி தொலைவில் ஆட்டோ சென்று கொண்டு இருந்ததாகவும் அது கவிழ்ந்ததாகவும் அதனை நேரில் பார்த்ததாகவும் சொல்லும் விவரங்கள் பொய்யானவை என்றால் அது சரியல்ல. அந்த

விபத்து ஏற்படுத்திய பகுதியில் சற்று வளைவான பகுதி என்பதால் வேகமாக சென்ற ஆட்டோ வளைவில் கவிழ்ந்து ரோட்டின் ஓரத்தில் இருந்து தையல மரத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான் . ஆட்டோவில் மொத்தம் எத்தனை பேர் போனார்கள் என்று சொன்னால் 5–6 பேர் போனார்கள். சம்பவ இடத்தை நானும் , மற்ற நபர்களும் போய் பார்த்தோம். அதன்பிறகு ஆம்புலென்சுக்கு போன் செய்து ஆம்புலென்ஸ் வந்து அடிப்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள்.

நான் அந்த இடத்தில் ஆம்புலென்சில் ஏற்றுக்போது அங்கு இருந்தேன். அடிப்பட்ட நபர்களுக்கு என்ன ஆனது என்று சொன்னால் துர்கா என்பர் ஸ்பாட்டிலே இறந்துவிட்டதாக தெரிந்தது , மற்றவர்களை மருத்துவமனைக்கு கொண்டு போனார்கள் . விபத்து நடந்தது உண்மை என்றால் சரிதான் . போலீசாரிடம் நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை . போலீசார் அந்த இடத்தை பார்வையிட்டு Map வரைந்தார்கள் என்றும் , அப்போதும் என்னிடம் கையெழுங்தது வாங்கவில்லை என்றால் சரிதான் . போலீசார் என்னிடம் வாக்குமூலம் பதிவு செயய்வில்லை என்றால் சரிதான் . வெங்கடேஷ் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் அது தவறு . இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு . என்னுடைய சாட்சி ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் அது தவறு.

<u>**மறுவிசாரணை : இல்லை**</u>

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.04 09:50:59 +0530